<u>அவசரக்கூட்டம்</u>

2023–ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் **24–ம்** தேதி **வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு** பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் அவசரக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

திரு.மோ.செல்வராஜ்,
தலைவர்
பள்ளிபாளையம் நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

<u>பொருள் எண்.1</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 12.04.2023ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரை மற்றும் 17.04.2023ம் தேதிய வரைபடம் சரிபார்ப்பு படி, பள்ளிபாளையம் நகராட்சி ஆவாரங்காடு பகுதியில் வாரச்சந்தை அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுத்தலின் பேரில் வாரச்சந்தை அமைய உள்ள இடம் நகர்மன்ற தலைவர், ஆணையாளர், பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் வாரச்சந்தை அமைக்கும் பணிக்கு ஆவாரங்காடு பகுதியில் சமுதாயக் கூடம் மற்றும் விழா கலையரங்கம் அமைந்துள்ள வளாகம் தேர்வு செய்யப்பட்டு விரிவான திட்ட அறிக்கை ரூ.1.25 கோடிக்கு தயார் செய்யப்பட்டது. விரிவான திட்ட அறிக்கை சமர்பிக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் வாரச்சந்தை அமைக்கும் பணிக்கு வரைபடம் 17.04.2023 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் சரிபார்க்கப்பட்டு இறுதி செய்ததின் பேரில் மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் முன்மொழிவு சமர்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வாரச்சந்தை அமையவுள்ள இடம் விளையாட்டு திடல் மற்றும், எம்.ஜி.ஆர்.கலையரங்கம் அமைந்துள்ள காரணத்தினால் அப்பகுதி வாழ் பொதுமக்கள், மாற்று கட்சியினர், இளைஞர்கள் போன்றோர் ஆவாரங்காடு பகுதியில் வாரச்சந்தை அமையப்பெற்றால், விளையாட்டு திடலில் விளையாடுவதற்கு இடையூறு ஏற்படும் என்ற நோக்கத்தினாலும், கலையரங்கம் அமைந்துள்ள காரணத்தினால் விழா நடைபெறுவது தடைபடும் என்ற கருத்தை முன்னிறுத்தி ஆட்சேபனை தெரிவித்து வருகின்றனர். மேலும், பள்ளிபாளையம் நகராட்சி 4.70 சதுர கிலோ மீட்டர் சுற்றளவு மட்டுமே கொண்ட நகரம் என்பதாலும், விரிவாக்கப்பகுதி ஏதும் இல்லாத காரணத்தினாலும் வாரச்சந்தைக்கான மாற்று இடம் தேர்வு செய்ய முடியாத நிலை உள்ளது என்பதை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.400/2023 /இ1

**தீர்மான எண்.205  நாள். 24.08.2023**

அங்கீகரிக்கப்பட்டது.